பக்கங்கள் 8

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-12-
PERIODICALS DIVISION

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 | கார்த்திகை 20 | முஹர்ரம் 26 | இதழ் 296
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 5-12-80

## நெடுங்கேணி அகதிகள் முகாம் மாணவர்க்கு கல்விக் கூடம்

### யாழ். எம். பிக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி அகதிகள் முகாம் மாணவர்களின் கல்வி வசதிக்கென அங்கு ஒரு பாடசாலை ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இப்பாடசாலை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களால் இப்பகுதி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. தனியார் பாடசாலையாக இயங்கவிருக்கும் இப்பாடசாலையின் கட்டிடத்தை அமைப்பதில் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் எடுத்த தனியான அக்கறைக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது முயற்சியால் யாழ் நகரில இக் கல்விக்கூட நிதிக்காக நாட்டிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (கி-கு)

---

அரசசேவை நியமனங்களில் தமிழ் மக்கள் புறக்கணிப்பு

# புள்ளி விபரங்களுடன் 'அமிர்' சபையில் குற்றச்சாட்டு!

## இந்நிலை எப்படி ஏற்பட்டது என்று பிரதமர் கேள்வி

(கொழும்பு)

அரசாங்கசேவையில் நியமனங்கள் வழங்கப்படும்போது தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தி; இதுதொடர்பான புள்ளி விபரமொன்றினையும் அங்கு சமர்ப்பித்தார்.

இப்புள்ளிவிபரத்தைத் தம்மிடம் தருமாறு கேட்டுக்கொண்ட பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இப்படியான ஒருநிலை எப்படி ஏற்பட்டது என்பதைத் தான் அறிய விரும்புவதாகவும் எத்தனைபேர் இதற்கு விண்ணப்பித்திருந்ததார்கள் என்ற விபரத்தையும் அறிய விரும்புவதாகத் தெரிவித்தார்.

பொதுநிர்வாக அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

'கடந்த 3 ஆண்டுகளாக அரசாங்கசேவைக்கு 4239 பதவிகள் நிரப்பப்பட்டன. இவற்றில் 300க்கும் சற்றுக் கூடிய தொகையினரே தமிழ் பேசும் மக்கள்.

இந்தநாட்டின்சனத்தொகையில் 27 வீதம் கொண்ட தமிழ் பேசும் இனத்துக்கு 7 வீதமே பதவிகள் வழங்கப்படுகின்றன. இப்படி மிகமிகக்குறைந்தவழியர்களை நியமித்தால் தமிழ் மொழி உபயோகத்தை எப்படி அமுல்செய்யப்போகிறீர்கள்.

'தமிழ்மக்களுக்குச் சகல உரிமையும் வழங்கப்பட்டுவிட்டதாகக்கூறிக்கொள்ளும் அரசாங்கம் இப்படித் தமிழர்களைப் புறக்கணிப்பது ஏன்' என்று திரு. அமிர்தலிங்கம் வினவினார். (கு)

---

## பஸ் விபத்தில் 8 பேர் பலி!

புதுடில்லி, டிச. 4

மகாராஷ்டிர அரசு போக்குவரத்துபஸ்ஒன்றும் எண்ணை வண்டியொன்றும் மோதிக்கொண்டதில் 8 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

இதில் ஏழுபேர் ஸ்தலத்தில் பலியானதாகவும், ஒருவர் வைத்திய சாலையில் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

---

## புயல் அபாயம்

சென்னை, டிச. 04

வங்காளவிரிகுடாவின் தென் மேற்கில் மையம் கொண்டிருந்த காற்றழுக்கம் தற்போது நெல்லைக்கு 350 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளதாகவும் இது வடமேற்குத் திசைநோக்கி நகர்ந்து செல்லுமென்றுப் சென்னை வானிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது. (கு)

---

## 117 பேருக்கு மீண்டும் வேலை கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்த 117 பேருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க பொதுச் சேவைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் யாழ். கிளையைச்சேர்ந்த யாழ். தபால் இலாகாவைச் சேர்ந்தவர்களுக்கே மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளதாக திரு. எஸ். விஜயானந்தன் தெரிவித்தார். (கொ)

---

## "கதவை உடைத்து வெளியே வந்தபோது மனைவி இறந்து கிடப்பதைக் கண்டேன்"

### புங்குடுதீவு மூதாட்டி கொலை, கொள்ளை வழக்கில் கணவன் சாட்சியம்

(ஊர்காவற்றுறை)

"எங்களை அறைக்குள் பூட்டிவிட்டு அவர்கள் வெளியேறிய பின்னர் அறைக்குள் இருந்த சுத்தியல் ஒன்றின்மூலம்கதவை உடைத்து வெளியேவந்தோம். அப்போது எனது மனைவி வெளியே இறந்து கிடப்பதைக் கண்டேன்".

இவ்வாறு புங்குடுதீவு மூதாட்டி கொலை கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த காலஞ்சென்ற மூதாட்டியின் கணவரான சின்னத்துரை (வயது71) கூறினார்.

இவ்வழக்கில், கடந்தஆவணி மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு புங்குடுதீவுஇறுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை அன்னம்மா என்னும் பெண்ணைக் கொலைசெய்ததாகவும் அவரது வீட்டிலிருந்த சில பொருட்களைக்கொள்ளையடித்ததாகவும், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாகவும் புங்குடுதீவைச் சேர்ந்த சோமசுந்தரம் சுப்பிரமணியம், நல்லையா ஆனந்தன், தம்பாப்பிள்ளை குணசிங்கம், கிருஷ்ணபிள்ளை பாமலிங்கம் ஆகிய நான்கு எதிரிகள்மீதும் குற்றஞ்சாட்டப்பட்டு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வழக்கில் அரசதரப்பில் யாழ். உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம் எஸ். எம்.நிசாம் ஆஜராகி சாட்சியின் சாட்சியத்தை நெறிப்படுத்தினார். இறந்தவரின் நலன்களைக் கவனிக்குமுகமாக சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் ஆஜராகியிருந்தார்.

1-ம் 4-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி பி. கைலாசநாதனின் அனுசரணையுடனும், 2-ம் 3-ம் எதிரிகளின் சார்பில் கே. வி, எஸ். சண்முகநாதன் சட்டத்தரணி திருமதி சரோஜினி இளங்கோவனின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தார்.

சாட்சியமளித்தபோது; சின்னத்துரை தொடர்ந்து கூறியதாவது:

### திறப்பைக் கொடுத்தேன்

"சம்பவதினம் நானும்வெளிநாட்டில் தொழில்பார்த்துவிட்டு ஊரில் வந்து நின்ற எனது மகன் முத்துலிங்கமும் காலஞ்சென்ற எனது மனைவியும் இரவு 8 மணியளவில் சாப்பிட்டுவிட்டு 8-30 மணியளவில் படுக்கைக்குச் சென்றோம். இரவு 1-30 அல்லது 2-00 மணியளவில் நாய் குரைக்கும் சத்

(8ம் பக்கம் பார்க்க)

---

மன்னாரில் காலரா நோய்

# நால்வர் மரணம்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் காலராநோய் வேகமாகப் பரவிவருகிறது. காலரா நோயால் பாதிக்கப்பட்ட நால்வர் மன்னார் அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்கள்.

சிலாபத்துறையில் ஆரம்பமான காலரா நோய், படிப்படியாக மன்னார் மாவட்டம் முழுவதும் பரவும் ஆபத்து இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாபத்துறை, பறப்பாங்கண்டல், தாழ்வுப்பாடு, உப்புக்குளம், சவுத்பார் ஆகிய இடங்களில் காலரா நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காலரா நோய் பரவியுள்ள இடங்களிலும் மற்றைய இடங்களிலும் காலரா நோயைத் தடுக்க மன்னார் நோய்த் தடுப்புப் பிரவினர் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவி வரும் காலரா நோய் பேசாலையில் பரவாதிருக்க நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை நால்வர் இந்நோய்க்குப் பலியாகியுள்ளனர் மேலும் எட்டுப்பேரின் நிலை மோசமாகவுள்ளது. மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 78 நோயாளர்களுக்கு காலராவுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

காலரா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு [illegible] சிகிச்சையளிக்குமாறும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (கு)

---

## சான்றிதழ்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடல்தொழில் பயிற்சிக் கல்லூரியில், இயந்திர இயக்குனர் பொறிமுறைப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று மாலை நடைபெறவுள்ளது.

[illegible] அதிபர் திரு. எஸ். [illegible] தலைமை தாங்குவார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 'இத்தாலியன் லம்பிறட்டா' 6 ஸ்ரீ தொடர் இலக்க ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: எம். எவ் டிராக்டர் என்ஜினியேர்ஸ், 70, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 7515

செண். பற்றிக்ஸ் பாடசாலைக்கு அருகில் 1½ பரப்புக் காணியும் 7 அறைகளைக் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. உரிமையாளர்: மா. புவனேந்திரன், தொடர்பு: மா. கணேஸ், 41/12, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். 7495

## விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப்பாடசாலைக்கு அண்மையில் பலாலி ரோட் ஓரமாக காணி விற்பனைக்குண்டு தொடர்பு:- சம்பந்தர், 19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7521

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பெண் லிகிதர் தேவை. சங்கர் ரவல் சேர்விஸ், 125, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 7518

பூவரசம் நேரான கதியால் தடி 8 அடிக்கு குறையாதது 1000 தடி தேவை. கையிருப்பாளர்கள் தொடர்பு கொள்ளவும் பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7524

# நினைவாஞ்சலி

செல்வி காமினி
இரத்தினசிங்கம் (பாப்பா)
(1-ம் ஆண்டு சிரார்த்ததினம்)
பூவுலகில் 25-2-1971
வானுலகில் 17-11-1979



ஓராண்டு கண்ணீரில்
மூழ்கிவிட்டோம்
கூண்டினிலே இருந்தவர்களைத்
தவிக்கவிட்டு
கொஞ்சும் மணிக்கிளியே நீ
பறந்து சென்று
ஆண்டவனோடருகிருந்து
பேசுகிறாய்
அந்த மனச்சாந்தியிலே
வாழ்கின்றோம்.

செல்வத்தின் நினைவால் வாடும் பப்பா, மம்மி, அக்காமார், அண்ணாமார், தம்பிமார், தங்கைமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அம்மையா, அம்மம்மா மற்றும் உற்றார் உறவினர்.

நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

7523

# பிஸ்கால் விற்பனவு

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

சட்டத்துறை தலைமயதிபதி,
சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம்,
கொழும்பு.

வழக்காளி

வழக்கு இல. 14094. எதிராக

1. பொன்னம்பலம் பாலசுந்தரம்
   நெடியகாடு, வல்வெட்டித்துறை.
2. தங்கவடிவேலு நந்தகுமார், கிழக்கு ரோட்டு,
   வல்வெட்டித்துறை.
3. கந்தசாமி முத்துக்குமாரசாமி
4. முத்துக்குமாரசாமி அருந்தவநாயகி,
   வல்வெட்டித்துறை.

எதிராளிகள்.

மேலே சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1979-ம் ஆண்டு தைமாதம் 11-ந் திகதி இம்மன்றின் தீர்வையின் பிரகாரம் ரூபா 20,000/-மும் மேலும் 31-8-77-ந் திகதி தொடக்கம் இறுக்கும் வரை சட்டரீதியான கடும் வட்டியும் கோட்டுச் செலவாக ரூபா 818/84 சதத்தையும் இன்றுவரை மேலே சொல்லப்பட்ட 1-ம், 2-ம் எதிராளிகள் கட்டத்தவறியமையால் கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 29-ந் திகதி காலை 10-00 மணிக்கு குறித்த ஆதனத்திலிருந்து பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

## ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி, உடுப்பிட்டிக் கோயிற்பற்று, வல்வெட்டித்துறையிலுறை ஆனைவிழுந்தான் வீடு ½ பரப்பு வளவு 4½ இவைகளில் வடக்கரைவாசியில் தெற்கரைவாசிக்கு ஆட்சிப்படி நிபர 1 குளி ½ எல்லை. கிழக்கு சின்னத்தம்பி நாகரத்தினம் பெண் அன்னராணியம்மாவுக்குடைய ஆதனம். வடக்கு குமாரசாமி பெண் அன்னலட்சுமிக்குடைய ஆதனம், மேற்கு க. மாணிக்கவாசகம் பெண் தங்கரத்தினத்துக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், தெற்கு வெற்றிவேலு பெண் மகமாசியம்மாவுக்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள் வீடுகள் மண்டபங்கள் அடங்கலும்.

**வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை**
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்ற், பருத்தித்துறை.
03-12-1980. 7520

# பெற்றோல், டீசல், மண்ணெண்ணைக்கு 'பெர்மிட்' முறை

(யாழ்ப்பாணம்)

பெற்றோல், டீசல், மண்ணெண்ணை ஆகியன 'பெர்மிட்' முறையில் வழங்கப்படவுள்ளன.

மோட்டார் வாகனங்களுக்கு பெற்றோல் டீசல் ஆகியவற்றுக்கான பர்மிட்டுக்கள் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ். செயலகத்தில் வழங்கப்படுகிறது. மண்ணெண்ணைப் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும். அதற்கான பங்கீட்டு அட்டைகள் ஜனவரி மாத நடுப்பகுதியில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல், டீசல் ஆகியவற்றுக்கான 'பெர்மிட்டு'களைப் பெறவிரும்புபவர்கள் தங்களுடைய வாகனங்களின் 81ம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி யாழ். செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வாகன உரிமையாளர்கள் தாங்களே நேரில் கச்சேரிக்குச் சென்று 'பர்மிட்டை' பெற்றுக்கொள்ளவேண்டும். நேரில் சென்று பர்மிட்டைப் பெற முடியாதவர்கள் ஆதாரத்துடன் ஒருவரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

அரசினால் விநியோகிக்கப்படு 'பர்மிட்டை'த் தவறவிடுபவர்களுக்கு எக்காரணம் கொண்டும் மீண்டும் 'பர்மிட்' வழங்கப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

1981ம் ஆண்டு புதிய கூப்பன் பங்கீட்டு அட்டை வழங்கப்படும் போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் மண்ணெண்ணை 'பர்மிட்டும்' வழங்கப்படவுள்ளது.

பர்மிட்டுக்கு எண்ணை வழங்கும் முறை ஜனவரி பிற்பகுதியில் நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

1981ம் ஆண்டுக்கான மோட்டார் வாகன வரியை வாகனச் சொந்தக்காரர்கள் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டுமென்றும் அதற்குப் பின்னர் செலுத்துபவர்கள் 10வீதம் குற்றப் பணம் செலுத்தநேரிடும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். (கொ)

# முதலாம் வகுப்பில் மாணவர்களை அனுமதிப்பதில் நெருக்கடி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தில் முதலாம் வகுப்பில் மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து காங்கேசன்துறை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

மேற்படி வித்தியாலயத்தில் முதலாம் வகுப்பில் பிள்ளைகளைச்சேர்ப்பதற்கு 120க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்த அதே நேரத்தில் இவ் வித்தியாலயத்தில் தலா 40 பிள்ளைகள் வீதம் இரு வகுப்புக்களை மட்டுமே நடத்த அனுமதி உள்ளதால் 80 விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு மிகுதியை ஏற்றுக்கொள்ள முடியவில்லையென பதில் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேலும் ஒரு வகுப்பை கூடுதலாக நடத்த கல்வியமைச்சின் அனுமதியை பெறுவதாக இருந்தால் இங்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக இவ்வித்தியாலய அபிவிருத்திச்சபை கூடி ஆராய்ந்து எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் முறையிட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# மாணவர் அதிர்ச்சியைநீக்கிய மன்னார் கல்வி அதிகாரி

(மன்னார்)

வங்காலை மகா வித்தியாலயத்தில் பரீட்சைஎழுத இருந்த மாணவர்கள் அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

வங்காலைப் பகுதி மாணவர்களுக்கு வங்காலை மகாவித்தியாலயம் பரீட்சை நிலையமாக இருக்கும் என்று மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசிநேரத்தில் இம்மகா வித்தியாலயத்தில் பரீட்சை நடைபெறாது என்று அறிந்த மாணவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

இதுசம்பந்தமாக வங்காலை மாணவர்கள் மன்னார் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் சரீப்பிடம் முறையிட்டதைத் தொடர்ந்து உடன் நடவடிக்கையில் ஈடுபட்ட மன்னார் பிரதம கல்வி அதிகாரி, வங்காலைப் பகுதி மாணவர்கள் மன்னார் செண். சேவியர் கல்லூரியில் பரீட்சை எழுத உடனடியாக ஒழுங்குகள் செய்து கொடுத்தார்.

# புனித அன்னம்மாள் நூற்றுண்டு விழா

(மன்னார்)

வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தின் நூற்றுண்டு விழா அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் விளையாட்டுப் போட்டிகள், நாடகப்போட்டி, கட்டுரைப் போட்டி உட்படப் பல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நூற்றுண்டு விழாவையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்படும். இம்மலரின் ஆசிரியர்களாக இளைப்பாறிய அதிபர்கள் திருவாளர்கள் ஜே. மிண்டா, எஸ். ஏ மார்க், எஸ். எஸ். பீரிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கலைஞர்களின்நலனைகாப்பது சமுதாயத்தின் கடமை

(மட்டுவில்)

''கலைஞர்கள் சமுதாயத்தின் முன்னோடிகள். ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தை பிற சமுதாயத்தின் தொடர்பை இணைக்கும் கலைப் பாலங்களாக அமைபவர்கள் கலைஞர்களே. இப்படியான கலைஞர்களின் நலனைக்கவனிக்க வேண்டியது அந்தந்தச் சமுதாயத்தின் கடமையாகும். இந்த அடிப்படையில் எமது சோமாஸ்கந்தா சனசமூக நிலையம் முன்னோடியாக விளங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்''.

இவ்வாறு மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்த சனசமூக நிலையத் தலைவர் திரு. என். குணவீரசிங்கம் குறிப்பிட்டார்.

சோமாஸ்கந்த சனசமூக நிலைய கழக உறுப்பினரும் கழகத்தின் நாடக ஆசிரியருமான திரு. அருள் வேலழகன் அண்மையில் விபத்தொன்றில் சிக்கி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சோமாஸ்கந்த சனசமூக நிலையத்தலைவர் செயலாளர் பொருளாளர் நிர்வாகக் குழுவினர் அவரை நேரில் சென்று பார்வையிட்டு அவருக்கு உதவி அன்பளிப்பாக ஒரு நிதி முடிப்பையும் வழங்கினர். இவ்வைபவத்தில் தலைவர் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது;-

''சனசமூக நிலையங்கள் கலை கலாசாரத்தை வளர்க்க வேண்டியது. எத்துணை அவசியமோ அதேபோன்று கலைஞர்களின் இக்கட்டான நிலையில் அவர்களுக்கு கைகொடுத்துதவுவதும் அவசியமாகும். இத்துறையில் எமது சனசமூக நிலையம் ஒரு முன்னோடியாக உள்ளது போற்றுதற்குரியது'' என்றார்.


# வைத்திலிங்கம்ஸ்

☆ உறுதியானதும்
☆ நீடித்து உழைப்பதும்
☆ தன்னிகரற்றதுமான

**'றிவர்' பிராண்ட்**

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும்,
இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

**என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்**

450, பழைய சோனக தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 33143-4

கிளை:
138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


# விற்பனவு நிலையம்

(மன்னார்)

மன்னாரில், இலங்கைக் சட்டப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தால் நிறுவப்பட்டு வரும் கட்டடப் பொருட்கள் விற்பனவு நிலைய நிர்மாணவேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளது. மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் இந்நிலையம் நிறுவப்பட்டுவருகிறது.


'செவன் ஆர்ட்ஸ்'
அளிக்கும்

**ஒரு தலை காதல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசர் சார்ள்ஸுக்கு

## சென்னையில் சிறப்புமிகு வரவேற்பு

சென்னை, டிச. 4

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ், சென்னை வந்து சேர்ந்தபோது வீதியெங்கும் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறப்பான வரவேற்பளித்தனர்.

மகாபலிபுரத்திலிருந்து இன்று காலை சென்னை வந்து சேர்ந்த இளவரசர் சென்னை சார்ள்ஸ் தேவாலயத்திற்குச் சென்று வழிபட்டார். மாலை தமிழக கவர்னர் ஐனுப் சாதிக் அலிவரவேற்பளித்தார். இவ்வரவேற்பில் முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், பல அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

சென்னையில் நடைபெற்று வரும் சிறு கைத்தொழில் பொருட்காட்சியையும் இளவரசர் சாள்ஸ் பார்வையிட்டார். சேலம் மாவட்டத்தில் உள்ள மாதிரிப்பண்ணையையும் அவர் சென்று பார்த்தார். (கு-)

## விஷ சாராயம் அருந்தி 25 பேர் மாண்டனர்!

புதுடில்லி, டிச. 4

ஹரியானுமாநிலத்திலுள்ள கிராமமொன்றில் விஷம் கலந்த சாராயம் அருந்தியதினால் 25 பேர் மாண்டதாகக் கூறப்படுகிறது.

இச்சாராயத்தைக் குடித்த இன்னும் பலர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் நான்குபேர் பார்வையிழந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

சத்தியவாணிமுத்து

## அ. தி. மு. க வின் பா. குழுத் தலைவர்

சென்னை, டிச. 4

முன்னாள் மத்தியஅமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அ. இ. அ. தி. மு. கவின் பாராளுமன்றகுழுத்தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

திரு. பி. மோகனரங்கம் குழுவின் துணைத்தலைவராகவும் திரு. இராமகிருஷ்ணன் தலைமைக்கொறடாவாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (கு)

## படகு கவிழ்ந்து 30 பேர் பலி!

புதுடில்லி, டிச. 4

கங்கையாற்றில் படகொன்று கவிழ்ந்ததால் சுமார் 30 பேர் வரை மாண்டதாகஅஞ்சப்படுகிறதுஇப்படகில்சென்றசுமார் 70 பேர் நீந்திக் கரைசேர்ந்ததாகவும் கூறப்படுறது. (வெ)

## பகல்பூரில் பொலிசார் ஆர்ப்பாட்டம்

பட்னு, டிச. 4

பீஹார் மாநிலத்தின் பகல்பூர் சிறைச்சாலையில் 31 விசாரணைக் கைதிகள் பொலிசாரினால் குருடாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து 15 பொலிசாரை மாநிலஅரசு தற்காலிக வேலைநீக்கம்செய்திருந்தது.

இதனை எதிர்த்து பகல்பூரில் பொலிசார் ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் ஆகியவற்றைநடத்திவருவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து தக்கநடவடிக்கைகளை மாநிலஅரசு மேற்கொண்டுள்ளதாக பீஹார் முதலமைச்சர் டாக்டர்ஜெகன்னாத் மிஷ்ரா தெரிவித்தார். (வெ)

# சீனாவின் அணு ஆயுத திறன் அதிகரித்துள்ளது

## சோவியத் நிபுணர்கள் கருத்து

மாஸ்கோ, டிச. 4

''சீனா தன் அணுஆயுத ஏவுகணைத் திறனை வேகமாக அதிகரித்துவருகிறது தன் திட்டங்களைச் செயல்படுத்த இதை மிகவும் சக்திவாய்ந்த சாதனமாக அது கருதுகிறது'' என்று சீன அணு ஆயுத ஏவுகணை திட்டத்தின் செயல்பாட்டை ஆராய்ந்த சோவியத் நிபுணர்கள் இந்தக் கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

சென்ற ஐந்தாண்டுகளில் 1000 கிலோ மீட்டரிலிருந்து 1300 கிலோ மீட்டர் வரை பாய்ந்துதாக்கக்கூடிய ஏவுகணைகள், மற்றும் 2400 கிலோ மீட்டர் முதல் 2900 கிலோ மீட்டர் வரை பாயும் ஏவுகணைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை சீனாவில் 150 சதவிகிதம் அதிகரித்துள்ளது. 10,000 கிலோ மீட்டர்வரை பாயும் கண்டம் விட்டுக் கண்டம் தாவும் ஏவுகணைகளும் சீனாவிடம் உள்ளன. 1974 முதல் 1970 வரை சீனா, 25 முறை பலதரப்பட்ட அணு ஆயுத சோதனைகள் நடத்தியது.

அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லக்கூடிய ராக்கெட்டுகளை உருவாக்கத் தீவிரமாக முயற்சிகள் நடந்துவருகின்றன, கண்டம் விட்டுக் கண்டம் தாவும் ஏவுகணைகளை பரிசோதிக்கப்பட்டிருக்கின்றன.

## பொலிசாருக்கு எதிராக வழக்கு

புதுடில்லி, டிச 4

பீஹார் மாநிலத்திலுள்ள பகல்பூர் சிறைச்சாலையில் 31 விசாரணைக் கைதிகளைக் குருடாக்கிய பொலிசாருக்கு எதிரான வழக்குகளை விசாரணை செய்யும் பொறுப்பை மத்திய புலனாய்வுப் பகுதியிடம் ஒப்படைக்குமாறு பீஹார் மாநில அரசு மத்திய உள்துறை அமைச்சைக் கேட்டுள்ளது. (வெ)

# இஸ்ரேலின் தாக்குதலால் பலஸ்தீனியர் பலர் பலி!

ஜெருஸலம், டிச. 04

இஸ்ரேல் துருப்புகள் தென் லெபனானில் நடாத்திய திடீர் தாக்குதலில் பல பலஸ்தீனிய கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாகனங்களில் சென்று கொண்டிருந்த பலஸ்தீனிய கெரில்லாக்களின் மீது இஸ்ரேல் துருப்புக்கள் தாக்குதல் நடாத்தியதில், அதிலிருந்த சகல பலஸ்தீனியரும் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய ராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் இஸ்ரேலின் எல்லைக்குள் பலஸ்தீனியர்களின் ஊடுருவலைத் தடுக்கவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார். (கு

## படைக்குறைப்பு பத்தாண்டு

நியூயோர்க், டிச. 4

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1980ம் ஆண்டுகளை படைக்குறைப்புக்கான இரண்டாவது பத்தாண்டுகள் என அறிவித்துள்ளது.

விரிவான அணுகுண்டுப் பரிசோதனைத்தடை ஒப்பந்தத்திற்கு முதல் முன்னுரிமையளிக்கவேண்டுமெனவும ஐ. நா. பொதுச்சபை உலக நாடுகளைக் கேட்டுள்ளது.

1982ம் ஆண்டில் படைக் குறைப்பு பற்றிய ஐ நா. சபையின் விசேடகூட்டமொன்றை நடத்தும் பொருட்டு குழுவொன்றும் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# போலந்து ஆட்சிமன்ற உறுப்பினர் நால்வர் வெளியேற்றம்

வார்சோ டிச 4

போலந்தின் தலைவர்களைப் பதவிநீக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் போலந்தின் ஆட்சிமன்றத்தைச் சேர்ந்த நான்கு அங்கத்தவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்திற்கு முதலாவது தடவையாக சவால் விடுக்கும் நோக்கத்துடன் சிலமாதங்களுக்கு முன்னர் போலந்தில் நடைபெற்ற தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இப்பதவிநீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

போலந்தில் ஆட்சிபுரியும் அரசியல் மன்றத்தின் தலைமையில் மாற்றங்களைச் செய்வது; கட்சியின் அரசில் பீடத்தின் தலைவர் திரு. ஸ்ரனிஸ்லோ கார்மியாவின் நிலையை வலுப்படுத்துவதாக அமைந்துள்ள தென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதவிநீக்கம் செய்யப்பட்ட இந்தநான்கு அங்கத்தவர்களும் திரு. கார்மியாவின் அரசியல்சீர்திருத்த நடவடிக்கைகளையும், புதிய சுதந்திர தொழிற் சங்கங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற முயற்சியையும் எதிர்த்தார்களெனக் கூறப்படுகிறது. (வெ)

## கிளர்ச்சியைக் கைவிடக் கோரிக்கை

புதுடில்லி, டிச. 4

ஒரிஸாவில் நடைபெற்று வரும் மாணவர் கிளர்ச்சிபற்றி ஆராய்வதற்காக மாநிலஅரசு 9பேர்கொண்டகுழுவொன்றை நியமித்துள்ளது.

கிளர்ச்சிசெய்துவரும் மாணவர்கள் தமது கிளர்ச்சியைக் கைவிட்டு கல்வியைத் தொடர [illegible] அவர்களைக் கோரியுள்ளது. (வெ)

# தென்னாபிரிக்காவில் அணுகுண்டு உற்பத்தி

லண்டன், டிச. 4

பிரிட்டிஷ் ஐ டி வி. டெலிவிசன் கப னிதரும் தகவலின் பிரகாரம்தென்னாபிரிக்கா, மேற்கத்தியநாடுகளின் உதவியுடன் அணுகுண்டு பொருத்தப்பட்ட குண்டுகளைத் தயாரித்துள்ளது. இப்பரிசோதனைகள் 1979 செப்டம்பரில் அத்லாந்திக் நடந்தேறின.

தென்னாபிரிக்காவின் இந்த திட்டத்துக்குப் பின்னால் சி. ஐ. ஏ. யின் கரம் உள்ளதாகவும் ஐ. டி. வி டெலிவிஷன் கூறுகிறது.

அது வெளியிட்டுள்ள தகவலின் பிரகாரம், ஐ. நா. தடைகளையும் மீறி அமெரிக்கஉளவு, ரஷ்ய மற்றும் ஸ்தாபனங்கள் அமெரிக்க தனியார் கம்பனிகள் மூலம் தென்னாபிரிக்காவுக்குத் தேவையான உபகரணங்கள், தொழில்நுட்பங்கள் முதலியவற்றை வழங்கின தென்னாபிரிக்காவும் இஸ்ரேலும் இத்துறையில் ஒத்துழைக்கவும் அவை உதவியளித்தன.

இஸ்ரேலிய தொழில் நுட்பத்துக்குப் பிரதியுபகாரமாக இஸ்ரேலுக்கு தென்னாபிரிக்கா யுரேனியம் விநியோகித்தது.

இஸ்ரேல் எந்தவேளையிலும் உபயோகிக்கக்கூடிய பல அணுகுண்டுகளை ஏற்கனவேகைவசம் வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

# 'அரசுக்குஆதரவளித்துஎமது தேவையைப் பூர்த்தி செய்வோம்''

(பண்டத்தரிப்பு)

''எமது தமிழ்ப்பிரதேசங்களின் அபிவிருத்தியிலும், முன்னேற்றத்திலும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் அதிகஅக்கறை கொண்டுள்ளது இச்சந்தர்ப்பத்தில் அதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும்வழங்கி பின்தங்கிய நிலையிலுள்ள எமது கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது எமது கடமையாகும்''.

இவ்வாறு வடலியடைப்பு ஐக்கியதேசியக்கட்சி வாலிப முன்னணியின் அங்குரார்ப்பணக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் வைத்தியகலாநிதி எஸ். தம்பித்துரை குறிப்பிட்டார். நூற்றுக்குமதிகமான இளைஞர்கள் பங்கு பற்றிய இக்கூட்டத்தில் திரு. தம்பித்துரைதொடர்ந்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது;

''இதுவரைகாலமும் எமது பகுதிமக்களும் குறிப்பாக இளைஞர்களும் சார்ந்திருந்த அரசியல் இயக்கங்கள் எவ்வித அபிவிருத்தியையும் எமதுகிராமத்திற்கு பெற்றுத்தரத்தவறிவிட்டன. படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புகள் எதுவுமின்றி விரக்தியடைந்த நிலையிலிருக்கின்றனர். இதிலிருந்து மீட்சியடைய வேண்டுமானால் நாம் புதியதொரு தேசிய அணியின் கீழ் செல்ல வேண்டியது அவசியமாகும். இந்நிலையில ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இன்று எமது பகுதிகளை அபிவிருத்தி செய்ய கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் நாம் நேரடியாக ஐ. தே. கட்சியில் இணைந்து முன்னேற்றப் பாதையில் செல்வோம்'' என்றார்.

## ஐ. தே. கட்சிக் கிளை

பண்டத்தரிப்பு

வடலியடைப்புக் கிராமத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் கிளை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான உறுப்பினர்கள் தற்போது சேர்க்கப்பட்டுவருவதாகவும், இதுவரை 150 பேர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், யாழ். மாவட்ட அமைச்சர் விரைவில் இக்கிளையை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம்செய்து வைப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மலேசியா செல்வார்

(சுழிபுரம்)

மலேசியாவில் வெளியிடப்படவுள்ள நாவலர் ஆராய்ச்சி நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக வட்டுக்கோட்டை தொகுதிதமிழ்ச் சங்கப் பிரதிநிதியாக பண்டிதர் அ. ஆறுமுகம் அங்கு செல்லவுள்ளார்.

## 'காம்ப்டேவிட்' ஒப்பந்தம்

வாஷிங்டன், டிச 4

இஸ்ரேலுக்கும் எகிப்திற்குமிடையே உருவாக்கப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கவிருக்கும் திரு. றொனல்ட் றீகன் தொடர்ந்து அமுல்நடத்த வேண்டுமென்று அமெரிக்கஜனாதிபதிதிரு. ஜிம்மி கார்ட்டர் கேட்டுள்ளார்.

திரு. றீகன் 'காம்ப்டேவிட்' ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்காசியாவில் சமாதானத்தை நிலைநாட்டவேண்டுமென்று அவர் மேலும் கேட்டுள்ளார். (வெ

## ஈராக் மீது கெரில்லா தாக்குதல்

லண்டன், டிச 4

ஈராக்கிற்குள் தனதுபுரட்சிக் காவல்படையினர் கெரில்லா தாக்குதலொன்றை நடத்தியதாக ஈரான் அறிவித்துள்ளது.

ஈராக்கின் பீரங்கிப்படை ஈரானின் எண்ணைசுத்திகரிப்பு நகரமான அபடானைத்தாக்கி தீமூட்டியதாக தெஹ்ரான் வானொலி தெரிவித்தது. (வெ)

## மன்னார் விவசாயிகள் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பருவகால மழை மிகவும் குறைவாகவே பெய்து வருகிறது. இதனால் மன்னார் மாவட்ட விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

தினமும் நல்ல மழை பெய்யக்கூடிய அறிகுறிகள் இருந்தும் மழை மிகவும் குறைவாகவே பெய்து வருகிறது. இதனால் இவ்வருட காலபோக விவசாயம் பாதிப்படையலாம் என்று விவசாயிகள் அஞ்சுகிறார்கள்.

## இன்று நினைவுதினக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுவாதி அமரர் வீரசிங்கத்தின் நினைவு தினக் கூட்டத்தை தேசிய கூட்டுறவுச்சபை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று மாலை நடத்துகின்றது.

'செவன் ஆர்ட்ஸ்'
அளிக்கும்
ஒரு தலை
காதல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பேரின்பம் உனக்குச் சொந்தம் ஆத்ம சாம்ராட் ஆக உனக்கு உரிமை உண்டு.
— சுவாமி சிவானந்தர்.

# கணவனுடன் உடன்கட்டை காட்டுமிராண்டித்தனம்!

## லோகசபையில் இந்திரா கண்டனம்

புதுடில்லி, டிச. 4

"கணவன் இறந்ததும் அவர்களுடன் உடன்கட்டை ஏறுவது காட்டுமிராண்டித்தனமான மூடப்பழக்கமாகும். இந்தப் புராதன இந்து மரபை முற்றாக ஒழிக்க சகலரும் ஒன்றுபடவேண்டும்" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

உடன்கட்டையேறும் நடவடிக்கையை மீண்டும் கைக்கொள்ள வேண்டுமென்று கோரி கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் புதுடில்லியில் 100 பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டம், பிரார்த்தனை ஆகியன பற்றிக் குறிப்பிடுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் அண்மையில் கணவனின் சிதையில் குதித்து உடன்கட்டை ஏறிய பெண் ஒருவரின் பெயரில் புதுடில்லியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம், பிரார்த்தனை ஆகியவற்றை பலமாகக் கண்டித்த திருமதி காந்தி மேலும் கூறியதாவது:

எந்த ஒரு விதவையும் கணவனின் சிதையில்குதித்துஉடன் கட்டை ஏறத் தாமாகவேமுன் வருவதில்லை. மூடப்பழக்கம் உள்ள சிலரின் நிர்ப்பந்தத்தினாலேயே அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே உடன்கட்டை ஏறுவது உத்தியோகபூர்வமாகத் தடை செய்யப்பட்டபோதிலும் இன்னமும் அது முற்றாக ஒழிந்துவிடவில்லை.



சீதனம் வழங்குவது இந்தியாவில் சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் சீதனக் கொடுமையினால் பல குமர்ப்பெண்கள் அநியாயமாக உயிர்துறக்கிறார்கள். இதனைத் தடுக்க நாம் அனைவரும் முன்வரவேண்டும். (இ)

# நமது நோக்கு

## இந்தியாவில் இரு பெரும் கொடுமைகள்

தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே என்ற வாக்கியத்தை மீறி நாம் செயற்படவேண்டியிருப்பது வேதனைக்குரியது.

புண்ணிய பூமியென்று எல்லோராலும் புகழப்படுகின்ற பாரத தேசம்இன்று உலகம் சிரிக்கும் நிலையில் சடுதியாகத் தள்ளப்பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் பேசப்பட்ட வசைமொழிகள், புனைந்துரைகளேஎன்பதாக உலகவர் நம்பிவர இன்று நடைபெற்றதென்ன? சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதி ராஜன் பாபுவை ஈன்றெடுத்த பீஹார் மாநிலத்தில் சிறை ஒன்றில் 31 விசாரணைக் கைதிகள் பொலிசாரினால் சித்திரவதை செய்யப்பட்டனர். அவர்களின் கண்கள் சைக்கிள் கம்பிகளால் குத்தப்பட்டன. அவற்றுள் ஒருவிதத் திராவகம் ஊற்றியதனால் அவர்கள் கண் பார்வை இழந்துவிட்டனர்.

புராணங்களில் வரும் அசுர காண்டத்திலும் இவ்வித அட்டூழியங்கள் நிகழ்ந்ததாக நாமறியோம். இச்செய்தியைக் கேட்ட இந்தியப் பிரதமர் நடுக்கமுற்று உடல்நலம் குன்றியிருப்பதாகச் செய்தி கூறுகிறது.

இந்நூற்றாண்டின் மிகக் கொடூரமான சம்பவம் என்று கருதப்படும் இச்செயலின் விசித்திரம் படுமோசமானது. இதனைத் துணிந்துசெய்த பொலிசார் இதன் விளைவு என்னவென்பதில் எள்ளளவும் அக்கறை கொண்டிருக்கமாட்டார்கள். அதுவே இக்கொடுமையின் உச்சநிலை என்பதை நாகரிக உலகம் உணர வேண்டும்.

டிசம்பர் பத்தாந்தேதி நாமெல்லோரும் மனித உரிமைத் தினத்தை அலங்காரமாகக் கொண்டாடவும், வாசாலமாகப் பேசவும் தயார்பண்ணுவது வழக்கமாகிவிட்டது அதில் அர்த்தம் ஏதும் உண்டா?

இக்கொடூரம் சற்றேனக் கெட்டாத தொன்று. ஆயினும் பொலிஸ் அட்டூழியங்கள் இந்திய விற்குத்தான் சொந்தமென்றில்லை. எங்கள் நாட்டிலும் பொலிஸ் சித்திரவதை இடம்பெற்றிருப்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்வது அவசியம்.

மனித அடிப்படை உரிமைகளை அரசியல் சாசனத்தில் அடக்கியிருக்கும் ஜனநாயக நாடுகள் இவ்விதக் காட்டுமிராண்டிச் செயல் அவ்வுரிமைகளை நிராகரிப்பதாகக் கருதி இது பண்ணும் தலையெடுக்காமற் தக்க தண்டனை வழங்கவேண்டும்.

இது இவ்வாறாக, மற்றொரு கொடுமையையும் நாம் குறிப்பிடவேண்டும். இருபத்தோராம் நூற்றாண்டை எட்டிப்பார்க்கும் எமது தாய்நாடு பின் 'கியர்' போட்டு குருட்டு நம்பிக்கையை மீண்டும் வரவேற்கின்றதா?

போன மச்சான் திரும்பி வருகிறானா?

மேனாட்டவர் அறிவியலில் முன்னணிக்குச் சென்றுவிட்டனர். பாரத தேசம் மெய்ஞ்ஞானம் பேசிக் கொண்டு அநாகரிகத்துக்குத் தூபமிடுகிறதா?

ஒரு நூற்றாண்டிற்கு மேலேயே விதவைகள் உடன்கட்டை ஏறல் சட்ட விரோதமான செயலென்று பிரகடனப்படுத்தப்பட்டது.

எங்கள் காலத்தில் வாழ்ந்த மானிட தெய்வமாகிய மகாத்மா காந்தியும், மனிதருள் மாணிக்கமென உலகம் புகழும் பண்டிதர் நேருவும் அறிவியலையும் அருளியலையும் பரதகண்டத்தின் மூலை முடுக்கெல்லாம் பரப்பிவந்தனர்.

இன்று விதவைகள் கட்டை ஏறவேண்டுமென்ற இயக்கத்தைப் பெண்களே மீண்டும் ஆரம்பித்துவிட்டனர். சமயத்தின் பேரால்-கலாசாரத்தின்பேரால் இது தொடங்கிவிட்டதாக இந்தியப் பிரதமரான உலகில் மிசக்கூடிய அதிகாரம் பெற்ற பெண்மணி கவலை தெரிவிக்கிறார்.

அதுமட்டுமல்ல சீதனக் கொடுமையால் விவாகமாகாத பெண்கள் விரக்தியடைந்து தங்கள் உயிரை மாய்க்கும் ஆபத்தும் இவ்வித கவலையைப் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இந்தியா ஒரு தேசம் அல்ல. ரஷ்யாவை ஐரோப்பாவின் படத்திலிருந்து அகற்றிவிட்டால் இந்தியா ஐரோப்பாவிலும் [illegible] கண்டம். எனவே இவ்வித கொடுமைகள் இம்மா பெரும் நிலப்பரப்பில் நடைபெற்றதனால் உலகெங்கும் சான்றோர் மகான்கள் அவதரித்த பரந்த புண்ணிய பூமி கெட்டுப்போவதாகக் கொள்வதற்கில்லை

சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.

இவ்வித தீமைகள் எங்கும் தலையெடுக்காமல், நாகரிக உலகம், மனித உரிமைகளைக்காக்கக்கடமைப்பட்ட உலகர், தக்க கண்டனம் தெரிவிக்கவும், உலக சமுதாய ரீதியில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் கடமைப்பட்டுள்ளது.

நல்லறிவைப் புகட்டுதற்கு நல்லாசானாயிருப்பது இத்தகைய துன்பம்-

## "பழைமையும் புதுமையும் கலந்த பண்பாடே நமக்குத் தேவை"

### – நல்லூர் 'சிவா'

(யாழ்ப்பாணம்)

'சில காலங்களுக்கு முன்பு நான் திருச்சிராப்பள்ளி சென்றிருந்தபொழுது அங்கு தொழிலாளர் விழா ஒன்றினைப் பார்வையிட வாய்ப்புக்கிடைத்தது. அந்த விழாவையொட்டி வீதிதோறும் கோலம் இடப்பட்டிருந்தது. பொதுவுடைமைச் சின்னங்கள் அந்தக் கோலங்களில் இடம்பெற்றிருந்தன. என்னதான் புதிய தத்துவங்களுக்கு நாம் ஆட்பட்டாலும் தமிழரான எமது பண்பாட்டை நாம் மறப்பதில்லை என்பதை இந்த நிகழ்ச்சி எனக்கு எடுத்துக் காட்டியது. இன்று இம்மகா வித்தியாலய மண்டபத்தில் கோலம் இடப்பட்டுத் தமிழ்ப் பண்பாடு பேணப்படுவதைக் கண்டு மகிழ்கின்றேன். பழைமையும் புதுமையும் கலந்த பண்பாடே நிலைப்பது. இன்று நாம் வேண்டுவதும் அது தான்.'

இவ்வாறு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் பதினெட்டாண்டுப் பூர்த்தி விழாவிற் கலந்துகொண்டு உரையாற்றுகையில் நல்லூர் எம். பி. திரு. மு சிவசிதம்பரம் கூறினார்.

ஆயிரக்கணக்கில் பெற்றோரும், பழையமாணவரும் நலன் விரும்பிகளும் கலந்துகொண்ட இவ்விழாவின் பரிசளிப்பு வைபவத்திற்கு வடமாநிலக் கல்வியதிபதி திரு. க. சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அவரது பாரியார் பரிசில்களை வழங்கினார். தாபகர் அரங்கிற்கு நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரமும் 'இராமகிருஷ்ணன்' சஞ்சிகை வெளியீட்டரங்கிற்குப் பேராசிரியர் க. கைலாசபதியும், இயல் அரங்கிற்குக் கலாநிதி அ. சண்முகதாசும் தலைமைவகித்தனர். சஞ்சிகை வெளியீட்டை திரு. ஆ. சிவநேசச்செல்வனும்ஆய்வுரையை மயிலங்கூடலூர் பி. நடராசனும் நிகழ்த்தினர். இயல் அரங்கில் திரு. நா. சுப்பிரமணியம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் உரையாளராய்க் கலந்துகொண்டனர். சங்கீதபூஷணம் பொன்.சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது. இசையரங்கிற்கு முன்னாள் கல்வியதிகாரி திரு. சு. சி. நல்லையா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (அ)

# மக்கள் கருத்து

## இக்குறை நீங்குமா?

மிருசுவில் வடக்குக் கிராமம் பெரிய காட்டுப் பகுதியாகக் காட்சியளிப்பதால், நுளம்புத் தொல்லையும் அதனால் ஏற்படும் மலேரியா நோயால் மக்கள் படும் கஷ்டமும் அளப்பரியது. பின்தங்கிய இக்கிராமத்தில் மலேரியா நோயால் மக்கள் கஷ்டப்படுவதை நன்கறிந்தும், சுகாதாரப் பகுதியினர் டி.டி.ரி. மருந்து தெளிக்காமல், மலேரியா நோயற்ற பகுதிகளான பிரதான பாதையோரங்களில் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த இருவருடங்களாக இவ்விதசெயல் நடைபெற்று வருவதால் இப்பகுதி மக்கள் வாழ்க்கையிலேயே வெறுப்பும், விரக்தியும் கொண்டுள்ளனர். இது சம்பந்தமாக சுகாதாரப் பகுதிக்கும், சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கும் பலமுறை மகஜர்கள் அனுப்பியும் எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அரசாங்கம் பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதாகப் பல தடவைகளிலும் அறைகூவிவரும் இக்காலத்தில், எமது கிராமம் ஏன் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறதோ தெரியவில்லை. நுளம்பு, பூச்சி, மூட்டை முதலியவற்றின் தொல்லைகள் நீங்கும் காலம் எப்பொழுது வருமோ? இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுபற்றி இனியும் வாழாதிராது நடவடிக்கை எடுப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

அ. தியாகராசா
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

∴ ∴ ∴ ∴

## அதிகாரிகள் கவனிப்பார்களா?

குருநகர் வட்டாரம் புதிய வீடமைப்புத் திட்டத்திற்குள் அடங்கிய வீடுகளில் இருபத்தைந்து வீடுகளையும் சேர்ந்த மக்கள் பாவனையிலுள்ள பிர[illegible] வீடமைப்புத் திட்டத்தின் [illegible] ஒழுங்கைகளில் பெரும் பள்ளங்கள் நிலவுவதால் மழைகாலங்களில் நீர்த்தடாகமாக இது மாறிவிடுகிறது இந்தமாதங்களில் இவ்வீதியால் நடமாட முடியாது இதனால் இரவுநேரங்களில் நுளம்புக்கடியும், சேறு மணமும் அதிகம். இப்பகுதியை கவனிக்கப் பொறுப்பான அதிகாரிகள் இனியாவது கவனித்து நிறைவேற்றுவார்களா?

கு. யூலிசன்
52, புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர்.

## நள்ளிரவுதிருட்டு: 14ம் திகதி வரை றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவுவேளையில் கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றில் 2 ஆயிரத்து 250 ரூபா பெறுமதிமிக்க பித்தளைப் பாத்திரங்களைத் திருடியதாக குற்றம் சாட்டி ஆனைக்கோட்டை பொலிசாரினால் ஆஜர் செய்யப்பட்ட அபுசாலி என்ற நபரை இம்மாதம் 14ம்திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். கிடாரங்கள் பித்தளைப் பாத்திரங்கள் போன்ற பாத்திரங்களை இரவு வேளையில் திருடிக்கொண்டு செல்கையில் மேற்படி நபரை இரவு ரோந்து சேவையில் சென்ற யாழ்ப்பாணம் பொலிசார் கையும் மெய்யுமாகப் பிடித்து கைது செய்தனர்.

பின்னர் இவர் ஆனைக்கோட்டைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆனைக்கோட்டைபொலிஸ்சார்ஜன்ட் திரு. தில்லன் துரை இவரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் இம்மாதம் 14ம் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

## பேசாலையில் மின்விநியோகம்

(மன்னார்)

பேசாலையில் மின்சார விநியோகம் இலங்கை மின்சாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பேசாலை கிராம சபையால் பேசாலைப்பகுதிக்கு வழங்கப்பட்டு வந்த மின்சார விநியோகம் கடந்த மூன்று வருடங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இலங்கை மின்சார சபை பேசாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## சிரியா— ஜோர்டான் எல்லைப் பிரச்னை

மடகாஸ்கர், டிச. 4

சிரியாவிற்கும் ஜோர்டானுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் சவூதி அரேபியா மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளதாக் கூறப்படுகிறது. (வெ)

'செவன் ஆர்ட்ஸ்'
அளிக்கும்
ஒரு தலை
காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சமயத்தால் வேறுபட்டாலும் மொழி தமிழர்-முஸ்லிம்களை இணைக்கிறது"

## வெளியீட்டுவிழாவில் கருத்து

(யாழ்ப்பாணம்)

"சமயத்தால் வேறுபட்டாலும் தமிழ்மொழி, முஸ்லிம்களை தமிழ்மக்களோடு ஒன்றிணைக்கிறது என்று பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்சிகையான 'யாழ் பிறை' வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அகில இலங்கை கதீப்மார் சங்க மத்திய சம்மேளனத்தின் தலைவரும் யாழ் பல்கலைக்கழக அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை விரிவுரையாளருமான மௌலவி கே. எம். எச். காலித்தீன் கூறினார்.

முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் ஜனாப் எஸ். எம். பாருக் தலைமையில் மேற்படி நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. மௌலவி காலித்தீன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

"சமயத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டு முஸ்லிம்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்துவருகிறார்கள். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆரியச் சக்கரவர்த்தி ஆட்சிக்காலங்களில் அரச சபையில் முஸ்லிம்களுக்கு மந்திரிப்பதவியை வழங்கி தமிழ் மன்னர்கள் முஸ்லிம்களை மதிப்போடு நடாத்தியுள்ளார்கள். பாண்டிய மன்னனின் அரச சபையில் சல்தான் ஸெய்யத் அறைமத் தூதுவராகவும் ஸிஹாபுத்தீன் பாண்டியநாட்டின் மந்திரியாகவும் ஆரியச் சக்கரவர்த்தியின் சபையில் காதர்வாலா மந்திரியாகவும் விளங்கியது இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

"தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு 'இந்துக்கள்' சமணர்கள், பௌத்தர்கள், வைஷ்ணவர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் தொண்டாற்றியுள்ளார்கள். முஸ்லிம்களின் தொண்டு குறிப்பிடத்தக்க அளவில் விரிவானதாகும். நானூறு ஆண்டுகளுக்குள் முஸ்லிம் புலவர்கள் முன்னூறு பேர்வரை பணிபுரிந்து ஆயிரம் நூல்களுக்கு மேல் எழுதியுள்ளனர். புராணங்கள், பிள்ளைத்தமிழ், கலம்பகம், அம்மானை, அந்தாதி, பிரபந்தங்கள், கும்மி, தாலாட்டு மாலை, சிந்து இவ்வாறு பல்வேறு வகையான இலக்கியங்கள் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி என்னும் இலட்சியத்தை வைத்து செயல்பட்டுள்ளமையை இவ்விலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இஸ்லாம் மனித இனத்தை ஒரே அமைப்பில் காணும் மார்க்கமாகும். இந்த பண்பைக் கொண்டவர்கள் மொழியை விட, இனத்தைவிட மனிதத்துவத்தை நேசிக்கின்றவர்களாக செயல்பட்டதையே தென் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நாம் காண்கின்றோம் என்றார்.

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. இ. கனகலிங்கம் தமது உரையில் "முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் சகோதரத்துவத்துடன் பழகும் பண்பைப் பெற்றவர்கள். அவர்களது திறமைகளை எமது பயிற்சிக்கலாசாலையிலும் காண்கின்றோம். பல சமூகங்களைச் சார்ந்த ஆசிரியமாணவர்கள் இங்கு கற்பது சமூகங்களைப்பற்றி அறிந்து கொள்ள நல்லதொரு வாய்ப்பினை அளிக்கிறது. முஸ்லிம் மாணவர்கள் தொடர்ந்தும் இங்கு வந்து கல்விபெறுவதை முழுமனதோடு நாம் வரவேற்கின்றோம் எனக்குறிப்பிட்டார்.

இவ்விழாவில் மலர்பற்றிய ஆய்வுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஜனாப் எம். ஏ. நுஃமான் நிகழ்த்தினார். விழாவில் மேலும் பலர் உரையாற்றினர். (கொ)

## மீண்டும் வேலை வழங்கியதற்காக ஜனாதிபதிக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

"வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் வேலையில் அமர்த்தியதற்காக நன்றி கூறுகின்றோம்" என்று அகில இலங்கை தமிழ்பேசும் தபால் தந்தி ஊழியர் சங்கம், ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளது

இச்சங்கத்தின் சார்பில் இதன் தலைவர் திரு. அ. அரசகுமார் அனுப்பி வைத்த தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்குமீண்டும் வேலை கொடுத்ததற்காக எங்கள் சங்கத்தின் சார்பில் நன்றிதெரிவித்துக் கொள்கின்றேன். வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களின் தற்போதைய குடும்பப் பொருளாதார நிலை மிகவும் மோசமாகியுள்ளதை எவரும் அறிவர். ஆகையால் தயவுகூர்ந்து அவர்கள் குடும்பங்களுக்காக நிவாரண நிதியாகவோ அல்லது சம்பள முற்பணமாகவோ வேறு எவ்விதமாகவேனும் உதவும்படி எமது சங்கத்தின் சார்பாக வேண்டிக்கொள்கின்றேன். கடந்த பொது வேலை நிறுத்தத்தில் எமது சங்கம் அரசுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்."

## தமிழ்த்திரைப்படப் பிரதிகளுக்கு பரிசு

(கொழும்பு)

தமிழ்த் திரைப்பட பிரதி எழுதுவோருக்கு ஊக்கமளிக்கு முகமாக தரமான பிரதிகளுக்குப் பரிசளிக்க தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

முதலாவது சிறந்த பிரதிக்கு 5,000 ரூபாவும், இரண்டாவது சிறந்த பிரதிக்கு 4,000 ரூபாவும், மூன்றாவது சிறந்த பிரதிக்கு 3,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## வைத்தியசாலையில் சிரமதானம்

(மன்னார்)

முருங்கன் அரசினர் வைத்தியசாலையில் சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முருங்கன் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையும் முருங்கன் மகாவித்தியாலய மாணவர்களும் ஒன்றிணைந்து முருங்கன் அரசினர் வைத்தியசாலையில் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டனர். சிரமதான நடவடிக்கைகள் மூன்று நாட்கள் மேற்கொள்ளப்பட்டன.

## மாங்கன்றுகள் விநியோகம்

(புலோலி)

புலோலி சமநலச்சேவை நிலையப்பகுதிக்குட்பட்ட மக்களுக்கு நல்ல இன மாங்கன்றுகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளைப் புலோலி விவசாயப் போதனாசிரியர் திரு பீ. பென்னையா மேற்கொண்டுள்ளார்.

இக்சமநலச் சேவை நிலையத்திற்குக் கடந்த திங்கட்கிழமை 500 நல்ல இன மாங்கன்றுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

# உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தாராம்!

(யாழ்ப்பாணம்)

வேலை செய்த ஹோட்டலிலேயே பணத்தைத் திருடிச் சென்ற 17 வயது இளைஞர் ஒருவர், பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர் குற்றவாளியாகக்காணப்பட்டார்.

தீர்ப்பு வழங்குவது இம்மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தெனியாயவைச் சேர்ந்த சிறிபால என்பவரே பொலிசாரால் கைது செய்யயப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டவராவர். யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ஆர். பாலசுப்பிரமணியம், கான்ஸ்டபிள் வி.தேவசகாயம் ஆகியோர் சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதைக் கண்ட பொலிசார் அவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி அவரிடமிருந்து 400 ரூபா பணத்தைக் கைப்பற்றினர்.

சந்தேக நபர் பொலிசாரால் விசாரணைக் குட்படுத்தப்பட்ட போது அவர் வேலை செய்த ஹோட்டலின் உரிமையாளரான டி. ரி பத்திரான என்பவர், சந்தேகநபர் சம்பவ தினம் மாலை 7 மணியளவில் தனது ஹோட்டலில் இருந்து 1,364 ரூபாவைத் திருடிச் சென்றதாகவும், அவர் தனது ஹோட்டலில் கடந்த 6 மாதமாக வேலை செய்து வருவதாகவும் யாழ். பொலிசில் புகார் செய்திருந்தார்.

சந்தேகநபர் மேலும் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது, தான்வேலை செய்த ஹோட்டலிலிருந்து பணத்தைத் திருடி, யாழ் பஸ்நிலையத்திற்குச் சென்று டாக்சி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் கிளிநொச்சிக்கு பஸ்நிலயத்துக்குச்செல்ல விரும்பியதாகவும், பஸ்நிலையத்திற்கு சந்தேகநபரை ஏற்றிச்சென்ற டாக்சிச் சாரதி கிளிநொச்சி பஸ் வெளிக்கிட்டு விட்டதால் சந்தேக நபரை மீண்டும் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்குக் கொண்டுவந்து இறக்கிவிட்டதாகவும் இதற்குக் கூலியாக சந்தேகநபர் 100 ரூபா கொடுத்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

சந்தேகநபர் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட போது அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதவான் திரு. ரி. ஜோகநாதன் சந்தேகநபரின் கைரேகையைப் பதிவுசெய்யும்படியும் இம்மாதம் 17-ம் திகதி வரை அவரை றிமாண்டில் வைக்கும்படியும், அன்றைய தினம் தீர்ப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (கொ)

## வேதாகம சங்க ஆண்டுக் கூட்டம்

(அரியாலை)

இலங்கை வேதாகம சங்கத்தின் 163 வது வருடாந்தக் கூட்டம் கொழும்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் இம்மாதம் 8 திகதி நடைபெறவிருக்கிறது.

வேதாகம சங்கத்தின் போஷகரும், கொழும்பு திருமண்டல பேராயருமான அருட்திரு. சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெறும் இவ்வருடாந்த கூட்டத்தில் இந்திய வேதாகம சங்கத்தின் பொதுச்செயலாளர் அருட்திரு. கலாநிதி [illegible] இன்பநாதன் அடிகளார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். இதனையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட வேதாகம புத்தகக்கண்காட்சி 8ம் திகதி திங்கள் தொடக்கம் 10ம் திகதி புதன்கிழமை வரை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

## நிர்வாகிகள்

(நீர்வேலி)

நீர்வேலி சரந்தன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: செ. நமசிவாயம் (பாடசாலை அதிபர்), உப தலைவர்கள்: சி. கனகரத்தினம், திருமதி வேதவல்லி கந்தையா, செயலாளர் ம. க. நடராசா, உப செயலாளர்: வே. சின்னத்தம்பி, பொருளாளர் கு. சண்முகநாதன், ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (சு)

'செவன் ஆர்ட்ஸ்'
அளிக்கும்
ஒரு தலை
காதல்

நத்தார் தினம்

## சிறப்பாகக் கொண்டாட யாழ். பொலிஸ் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ்கரோல் இம்முறை யாழ் திறந்தவெளியரங்கில் விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

யாழ் பொலிஸ் நிலைய மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மகாநாட்டில் நத்தார் தினத்தை யாழ்ப்பாணத்தில் சிறப்பாகக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது

யாழ் பொலிஸ் அதிபர் திரு. ஜயதிஸ்ஸ ஹேரத் தலைமையிலேயே இம் மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டில் பொதுமக்களும் கலந்துகொண்டு நத்தார் கரோல் சம்பந்தமாக தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

வாணவேடிக்கைகள், இசைவிருந்துகளுடன் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெறும். ஸ்ரீலங்கா பான்ட் கோஷ்டியினரை நத்தார் கரோலில் கலந்துகொள்ளச் செய்வதற்கான முயற்சியில் யாழ் பொலிஸ்அதிபர் ஈடுபட்டுவருகிறார். (கொ)

# யாழ். மாவட்ட அமைச்சுக்கு பவுஸர்; கிராமிய கைத்தொழில் அமைச்சு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அமைச்சிற்கு கிராமியக்கைத்தொழில் அமைச்சு 'பவுஸர்' ஒன்றை அனுப்பிவைக்கவுள்ளது.

கிளிநொச்சி பால் சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கும் பாலை யாழ். திருநெல்வேலி பால் சேகரிப்பு நிலையத்திற்குக் கொண்டுசெல்வதற்கு 'பவுஸர்' ஒன்று தேவைப்படுவதாக யாழ்மாவட்ட அமைச்சு கிராமியக் கைத்தொழில் அமைச்சிடம் விடுத்துள்ள கோரிக்கையைத் தொடர்ந்து மேற்படி அமைச்சினால் யாழ் மாவட்ட அமைச்சிற்கு 'பவுஸர்' அனுப்பிவைக்கப்படவுள்ளது.

கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. சௌ. தொண்டமான் 79ம் ஆண்டு கிளிநொச்சிக்கு விஜயம்செய்த போது அங்கு ஒரு பால் சேகரிப்பு நிலையத்தை ஆரம்பித்து வைத்தது குறிப்பிடத்தக்கது. இப் பால்சேகரிப்புநிலையம் ஆரம்பிக்கப்பட்டபோது நாளொன்றுக்கு 150 லிற்றர் பால் மட்டுமே சேகரிக்கப்பட்டது. தற்போது நாளொன்றுக்கு 1000 லிற்றர் பால் சேகரிக்கப்படுவதால் அங்கு மிகுதியாகவுள்ள பாலை யாழ் திருநெல்வேலி பால்சேகரிப்பு நிலையத்திற்குக் கொண்டுசென்று விநியோகிப்பதற்காகவே யாழ்மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கிராமிய கைத்தொழில்அமைச்சிடம் 'பவுஸர்' தேவைபற்றி வலியுறுத்தியிருந்தார். விரைவில் பவுஸர் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் திரு. கே. என். விரக்கொடி யாழ் மாவட்ட அமைச்சிற்கு அறிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் பால் சேகரிப்புநிலையம் ஆரம்பிக்கப்பட்டபோது நாளொன்றுக்கு 300 லீட்டர் பால் சேகரிக்கப்பட்டது. இப்போது நாளொன்றுக்கு 700 லீட்டர் பால் சேகரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் முழுவதும் விநியோகிக்கப்படுகிறது. (கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதபால் அதிபர்களுக்கு நிரந்தரச்சம்பளம் வழங்குக!

## பாராளுமன்றத்தில் 'அமிர்' வலியுறுத்து

(கொழும்பு)

உபதபாலதிபர்களுக்கு நிரந்தரமான சம்பளமொன்றினை வழங்கவேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் வற்புறுத்தினர்.

தபால் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு வற்புறுத்தினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''உபதபால் அதிபர்களுக்கு அவர்களின் வேலையின் அடிப்படையில் நாளாந்த சம்பளமே வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் தபால் சேவையை தனியார் ஏஜன்சிகளிடம் கையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கையளித்தால் உபதபால் நிலையங்களின் வேலைகள் குறைந்துவிடும் இதனால் உபதபால் அதிபர்களுக்கு மேலும் வருமானம் குறைந்துவிடும்.

''அரசாங்கம் இதுவிடயத்தில் கவனம் செலுத்தி அவர்களுக்கு நிரந்தர சம்பளம் வழங்கவேண்டும்.'' (ம-கு)

## அவமானம் தாங்காது தற்கொலை

(பண்டத்தரிப்பு)

நீதிமன்றத்தில் தமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை அறிந்த கோவில் குருக்கள் ஒருவர் அதனால் மனமுடைந்து கிருமிநாசினி அருந்தி தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். இப்பரிதாப சம்பவம் உடுவிலில் நடைபெற்றுள்ளது.

உடுவிலைச் சேர்ந்த நடராசக் குருக்கள் (வயது 70) என்பவரே இவ்வாறு மரணமானவராவர். இவரது மரண விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். மருதலிங்கம் முன்னிலையில் நடைபெற்றபோது காலமானவரின் பேரன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

''காலம் சென்ற எனது பேரனருக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று அவரது உறவினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. காணிப் பிரச்சினை தொடர்பான அந்த வழக்கிற்காக நீதிமன்றம் செல்ல வேண்டியிருக்குமே என்றும், இதுவரை நீதிமன்றம் போகாத நான் இனிமேல் நீதிமன்றத்திற்கு போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே என்றும் மனமுடைந்து அடிக்கடி கவலைப்படுவார். அத்துடன் இவருக்கு தொய்வு நோயும் இருந்தது. இக்கவலைகளினால் இவர் கிருமிநாசினி அருந்தியிருக்கலாம் என்று எண்ணுகிறேன். காலம் சென்றவர் சம்பவதினம் தான் பூசை செய்யும் முருகன் கோவிலில் கிருமிநாசினி அருந்தியநிலையில் மயங்கிக் கிடப்பதாக அறிந்து ஓடிச் சென்று பார்த்தபோது அவரின் உயிர் பிரிந்துவிட்டது.''

சாட்சிகளை சுன்னாகம் பொலிசார் ஆஜர் செய்தனர். மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினர்.

பருத்தித்துறைத்தொகுதி

## அபிவிருத்தி வேலைகள்; எம். பி. காலக்கெடு

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியின் அபிவிருத்திக்கெனப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைகள்யாவும் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாக வேண்டும் என்றும், அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளைப் பூர்த்தி செய்யாத நிறுவனங்களுக்கு அடுத்தவருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் எதுவிதகாரணம் கொண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்படமாட்டாதென்றும் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் அறிவித்துள்ளார்.

எம்.பி.யின் இந்த அறிவிப்பைத்தொடர்ந்து அபிவிருத்தி வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், இத்தொகுதிப் பாடசாலைக்கட்டிடங்களின் இறுதி வேலைகள் ஸ்தம்பித்துள்ளன. ஓடுகள் தட்டுப்பாடே இவ்விறுதி வேலைகள் ஸ்தம்பித்துள்ளதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிப்பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் தமது பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டிடங்களுக்குத்

(7-ம் பக்கம் பார்க்க)

## நீர், நிலவளத்தைப் பாதுகாக்க காடு வளர்க்கும் திட்டம்

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியின் நீர்வளத்தையும், நிலவழங்களையும் பாதுகாக்குமுகமாக காடுவளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளைக் குடத்தனை இளைஞர் கழகம் மேற்கொண்டுள்ளது.

காடுவளர்க்கும் திட்டத்திற்கமைய காடுகளை வளர்த்து நீர், நிலவளங்களைப்பாதுகாப்பதற்காக பத்துஏக்கர் நிலத்தை ஒதுக்கித்தரும்படி இவ்இளைஞர்கழகம் பருத்தித்துறை எம். பி. திரு.கே. துரைரத்தினத்தைக் கேட்டிருந்தது.

இப்பகுதியில் காடுகளை வளர்ப்பதற்காக வேண்டிய நிலத்தை ஒதுக்கித் தருவதற்கான நடவடிக்கைகளைத்தான் மேற்கொண்டுள்ளதாகவும், வெகு விரைவில் இந்நிலம் இவ்இளைஞர்கழகத்தினரிடம் ஒப்படைக்கப்படுமெனவும் எம்.பி. துரைரத்தினம் உறுதியளித்துள்ளார்.

## "கூட்டுறவு வளர்ச்சியில் யாழ். மாவட்டம் முன்னேற்றம்"

(நீர்வேலி)

''யாழ்.மாவட்டப் பகுதியில் மகளிர் குழுக்கள் எதிர்பாராத அளவு கூட்டுறவில் திடீரென வளர்ச்சியடைந்திருக்கின்றன. வருமானத்தைப் பெருக்கும் வகையில் குடிசைக் கைத்தொழிலில் மகளிர் குழுக்கள் ஈடுபட்டு முன்னேறி வருவது பாராட்டத்தக்கது. இம்முயற்சிக்கு ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் ஊக்கமளிப்பது போற்றத்தக்கது.''

சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின் தென்கிழக்காசியப் பிராந்திய இயக்குநர் திரு ஆர். பி. இராஜகுரு, ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபைப் பொதுக் காரியதரிசி திரு. சி. அங்குநாவல, மகளிர் பாவனையாளர் கல்வித்திட்ட இயக்குநர் செல்வி ஜெயந்தி தென்னக்கோன் ஆகியோருக்கு வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம் அளித்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு திரு. இராஜகுரு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. அங்குநாவல பேசுகையில்: ப. நோ. கூ. சங்கங்கள் மிகுந்த இலாபத்தைக் காட்டுவதிலும் பார்க்க அங்கத்தவர் கல்வியில் கவனம் செலுத்த வேண்டுமெனவும், விசேடமாக மகளிர் குழுக்களின் செய்முறைப்பயிற்சி, வேலைத்திட்டங்களுக்கும், கல்வித்திட்டத்திற்கும் மொத்த இலாபத்தில் கணிசமான அளவு ஒதுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

செல்வி ஜெயந்தா தென்னக்கோன் பேசுகையில்: சுவீடன் கூட்டுறவு மகளிர் ஸ்தாபனத்தினதும், சுவீடன்வெளிநாட்டு உதவி நிறுவனத்தினதும் உதவியால் ஸ்ரீலங்கா தேசியகூட்டுறவுச்சபை அறிமுகப்படுத்திய பாவனையாளர் கல்வித்திட்டம் மகளிர் குழுக்களினால் சிறப்பாக நடாத்தப்படுகின்றன எனவும் இத்திட்டத்தை விஸ்தரிக்க மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா திட்டங்களை காண்பதில் மகிழ்ச்சியடைகின்றோம் எனவும் குறிப்பிட்டஅவர் தென்பகுதியிலும் இதேபோன்று செய்ய வேண்டுமெனவும், வட பகுதி கூட்டுறவு வளர்ச்சிக்கு பலவகையிலும் முன்னோடியாக விளங்குகின்றது எனவும் குறிப்பிட்டார்.

திருமதி வேதவல்லி கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினர். (அ)

## சூட்கேஸ் திருட்டு

(மன்னார்)

ரயில் புறப்படும் நேரம் பார்த்து பிரயாணியின் சூட்கேசைத் திருடியவர் மாயமாக மறைந்துவிட்டார். இச்சம்பவம் மன்னார் ரயில் நிலையத்தில் நடைபெற்றது.

மன்னார் ரயில் நிலையத்தில் கொழும்பிலிருந்து தலைமன்னார் நோக்கி வந்த ரயில், நின்று புறப்படும் நேரத்தில் ரயிலில் பிரயாணம் செய்த பேசாலையைச்சேர்ந்த பி. ஜெயக்குமார் என்பவரது சூட்கேஸ் திருடப்பட்டது.

இச்சம்பவம் பற்றி யே. ஜெயக்குமார் மன்னார் பொலிசில் புகார் செய்துள்ளார்.

மன்னார் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## கூ. ஊ. சங்க சங்கானைக் கிளை நிர்வாகிகள்

(சித்தன்கேணி)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் சங்கானைக் கிளையின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. ஸ்ரீபஞ்சநாதன். உப தலைவர்: க. சற்குணராசா, செயலாளர்: வி. துரைசிங்கம், பொருளாளர் இ. கிருஷ்ணதுரை

பத்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கிணற்றில் சடலம்

(திருகோணமலை)

திருகோணமலை நகருக்கு அண்மையில் உள்ள ஆண்பான் குளம் என்ற பகுதியில் ஒரு கிணற்றில் இனம் தெரியாத நபரின் சடலம் மிதக்கிறது இது சம்பந்தமாக உப்புவெளிப் பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர். கொலையா அல்லது தற்கொலையா என்பது தெரியவில்லை.


'செவன் ஆர்ட்ஸ்'
அளிக்கும்
ஒரு தலை
காதல்



# வொலரோன் ஈ. சீ. 50%

வொலரோன் ஒரு சர்வபூச்சி நாசினி, மிளகாய், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் தத்துவெட்டி, வெட்டுப்புழு முதலாம் சகல தரைப் பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்டும், மிளகாய், வெங்காயப் பயிர்க் கம்பளப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் விசேஷ சக்தி வாய்ந்தது வொலரோன்.

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்




ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
தொலைபேசி: 93563, 96331-6

200 மி. லீட்டர் ரூபா 45-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி வாரம்
வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
Black Sunday


வின்ஸர் (யாழ்நகர்)
Daily at 10-30 A.M., 2-30, 4-30, 7-00 & 9-30 P.M. only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
FEAR IS THE KEY
Scope-Color Thrill & Action

ராணி (யாழ்நகர்)
Daily 10-00, 1-00, 4-00, 7-00 & 10-00
EVELYNE KRAFT, LI H SIU-HFIEN
in
MIGHTY HIMALAYAN MAN

SANTHI (JAFFNA) DAILY 5 SHOWS
10-15, 1-15, 4-15, 7-15 & 10-00
—Patrons Please Note! Altered Show Times—
★ CHARLES BRONSON ★ JIM BROWN
★ CLINT WALKER ★ TELLY SAVALAS
in
THE DIRTY DOZEN
ACTION PACKED COLOR MOVIE

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 4வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2 15, 6-00 & 9-30
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்



சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)


## தொலைபேசி வசதி இல்லை

(மன்னார்)

தலைமன்னார் பியர் உபதபால் நிலையத்தில்தொலைபேசி வசதியில்லை. இதனால் பொது மக்களும், பிரயாணிகளும் மிகவும் சிரமத்துக்குள்ளாகிறார்கள்.

தலைமன்னார் பியர் உபதபால் நிலையம் திறந்து வைக்கப்பட்டு ஒரு வருடமாகி விட்டது. இதுவரை அங்கு தொலைபேசி இணைக்கப்படவில்லை. இப்பகுதியிலுள்ளவர்கள் தொலைபேசித்தொடர்பு கொள்ள வேண்டுமானால் ஒன்றரை மைல் தூரத்திலுள்ள தலைமன்னார் தபால் நிலையத்திற்குச் செல்லவேண்டியுள்ளது.

## வெளிநாடு பயணமானார்

(துணுக்காய்)

துணுக்காய் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளராகக் கடமையாற்றிய யோகபுரம் குடியேற்றத்தைச்சேர்ந்த திரு. பா. விஜயகுலசிங்கம் தொழில் வாய்ப்புப்பெற்று ஜெர்மன் நாட்டுக்குப் பயணமானார்.

துணுக்காய்ப் பகுதிப. நோ. கூ. சங்கத்தில் 5 வருடங்கள் கிளைமுகாமையாளராகக் கடமையாற்றிய இவர், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கதுணுக்காய் கிளைத் தலைவராகவும், வடமாகாண தொழிற்சங்கப் பிரதிநிதியாகவும் கடமையாற்றினார்.

வலி. கிழக்கு

## கூ. ச- ஊழியருக்கும் புதிய சம்பள உயர்வு

(நீர்வேலி)

அரசாங்கத்தின் திட்டப்படி அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு 70 ரூபாவும் வலிகிழக்கு தெற்கு ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

பணியாளர்களின் முயற்சியால் நன்னிலையடைந்து வரும் இச்சங்கம் மிகுந்த லாபத்தில் இயங்கிவருகின்றதென்றும் மேலும் அவர்களை ஊக்கப்படுத்த அரசாங்கத்தின் திட்டப்படி சம்பள அதிகரிப்புச் செய்யவேண்டுமெனவும் இது பற்றி புதியநெறியாளர் குழு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிகிறது. (ஈ)

## அபிவிருத்தி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான ஒடுங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு எம். பி. துரைரத்தினத்தைக் கோரியுள்ளன.


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
ஞானக்குழந்தை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2 30
சிவாஜி - விஜயா
திருடன்

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
ஒருதாய் மக்கள்
(புதிய பிரதி)


## "இறைவனை ஆலயங்களில் கண்டு ஆத்மதிருப்தியடையலாம்"

### பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

(யாழ்ப்பாணம்)

"போட்டி, பொறாமை, குறுக்கீடு முதலியன தெய்வ காரியங்களுக்குக்கூட ஏற்படத்தான் செய்கிறது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தைப் பற்றியும் பொறாமையால் சிலர் வதந்திகளைப் பரப்பினார்கள். ஆனால் அடியார்கள் வராமல் விடவில்லை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் பெருந்தொகையான பக்தர்கள் வந்து செல்கிறார்கள்."

மேற்கண்டவாறு ஈழத்துச் சிதம்பரம் வடக்கு வீதியில் அமைந்துள்ளதும், அமரத்துவமடைந்த நீதிபதி திரு. நடராசாவின் பாரியாரால் நிர்வகிக்கப்பட்டுவருவதுமான காரைநகர் சிவாச்சிரமத்தில் நடைபெற்ற அதன் இருபதாவது ஆண்டு பூர்த்தி விழாவில் சிறப்புரை வழங்கிய செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

திருமதி நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "எம்முடைய வாழ்க்கையில் இறைவனை ஆலயங்களில் கண்டு ஆத்ம திருப்தியடைவது போல நாயன்மார்களினதும், ஆள்வார்களினதும் திருமுறைகளிலும், பக்திப் பாடல்களிலும் இறைவனைக் கண்டு மனநிறைவு பெற்றுக் கொள்ளலாம் இந்த வகையில் காரைநகர் சிவாச்சிரம அடியார்கள் தமது இருபதாவது ஆண்டு நிறைவு விழாவில் "திருமுறைத் தொகுப்பும் பக்திப் பாக்களும்" என்ற நூலை வெளியிட்டமையை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரீ. கே. என். திலகன், கலாநிதி வே. இராமகிருஷ்ணன், திரு. ஆ. தியாகராசா உட்பட பலர் உரையாற்றினர்.

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம்
20-ந் திகதி வெள்ளிக்கிழமை
(5-12-80)

மேடம்: காதலர்களுக்குக் கனகுஷியான தினம். பெற்றாரின் ஆதரவும் கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். தாம்பத்தியவாழ்வில் பிணைப்புகள் இறுகும்.

இடபம்: புதிய தலையிடி தலைதூக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

மிதுனம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பிதாவழியால் உதவி தாராளமாகக் கிடைக்கும். புண்ணிய விருப்பும் மேலிடும்.

கடகம்: தொழில்துறையில் முன்னேற்றம் தொடர்ந்து வரும். நிதியில் அபிவிருத்தி காணப்படும். தூரதேச பிரயாணத்திற்கும் இன்று இடம் உண்டு.

சிங்கம்: பொருள் வரவு அதிகமாகக் காணப்படும். மனதிற்கு நிம்மதியூட்டும் பொழுது போக்குக் கிடைக்கும். உற்சாகமூட்டும் செய்தியும் வந்து சேரும்.

கன்னி: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். பகைவர்கள் காத்திருப்பர். நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நிற்கவும்.

துலாம்: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதயபாரம் வேதனைப்படுத்தும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

விருச்சிகம்: வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். இன்று பேச்சு வன்மையால் பெரும் புகழ் அடைவீர்கள்.

தனுசு: சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணக்குக்கும் இடமுண்டு. வாய்ப் பதார்த்தங்களைத் தவிர்த்து தெய்வ நம்பிக்கையுடன் நடக்கவும்.

மகரம்; தடைப்பட்ட காரியம் நல்ல முடிவிற்கு வரும். தாய்வழிப் பெருமையும் உண்டு. வாகன நலனுடன் வாவிலும் சுகம் காணலாம்.

கும்பம்: தெளிந்த மனம். தெய்வசிந்தை தேடிவந்து கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு. புத்திர காலடகளும் சேரும்.

மீனம்; மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளம் இடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வெற்றி தோல்வி இல்லை

(மன்னார்)

வங்காலை மகாவித்தியாலயத்திற்கும் மன்னார்புனித சவேரியார் ஆண்கள்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டி வெற்றி தோல்வின்றி முடிவடைந்தது. இப்போட்டி மன்னார் புனித சவேரியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## ஆராதனை

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த நத்தார் இசை ஆராதனை யாழ். ட்றிம்பர் மண்டபத்தில் நாளை மாலை நடைபெறும். (வெ)

யாழ் பல்கலைக்கழக

## முஸ்லிம் மஜ்லிஸ் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் சார்பில் இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்களின் வளர்ச்சி முஸ்லிங்களின் நடைமுறைப் பிரச்னைகளும், அவற்றிற்கான தீர்வுகளும் என்னும் தலைப்புக்களில் கருத்தரங்கு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

'இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்களின் வளர்ச்சி' என்னும் பொருளில் மௌலவி கே. எம் எச். காலிதீனும் 'நடைமுறைப் பிரச்னைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்' என்னும் பொருளில் மௌலவி எம். ஐ. அப்துல் ரஸ்ஸாக்கும் உரையாற்றினர் இக்கருத்தரங்குக்கு மஜ்லிஸ் தலைவர் ஜனாப் ஸியாத் முஹம்மத் தலைமை வகித்தார் செயலாளர் ஜனாப் எம் ஸனூன் நன்றி கூறினர். (கொ)


ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி10-30, 2-00, 6-00 & 930
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

'செவன் ஆர்ட்ஸ்'
அளிக்கும்
ஒரு தலை காதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ்நாட்டுக்கைக்கடிகாரங்கள்
ஓமாக்ஸ்
வண்ணவண்ண டயல்களில்
ஆண்கள் பெண்களுக்கான
மின்னியக்கி – தன்னியக்கி
விசைதிருப்பி – கடிகாரங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் வாங்கலாம்.
வடபகுதி ஓமாக்ஸ் கைக்கடிகார
விற்பனை முகாமி.
**காந்தளகம்**
**213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## இளவரசர் சார்ள்ஸ் தாயகம் புறப்பாடு

சென்னை, டிச. 4 பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் தமிழ் நாட்டில் இரண்டு நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் புறப்பட்டுள்ளார்.

இளவரசர் சார்ள்ஸை தமிழ் நாட்டு கவர்னர் ஜனுப் சாதிக் அலி ம், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் விமானநிலையத்திலிருந்து வழியனுப்பிவைத்தனர். (வெ)

அன்பளிப்பு
கொடுக்கும் வியாபாரிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் விசேஷ கழிவு:-
கலண்டர் வகைகள்
தினசரி: பெய்சண்டான்-லீலா-சுசி, பூபாலசிங்கம் பஞ்சாங்கக் கலண்டர், திருக்கணித பஞ்சாங்கக் கலண்டர் — ராஜம், சிவம் மாதக் கலண்டர்.
மொத்த விற்பனையாளர்:
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம். T'phone: 7631

# சைக்கிள் திருட்டு

## ஒருவர் கைது!

(யாழ்ப்பாணம்) சைக்கிள்களைத் திருடியதாகச் சந்தேகத்தின் மீது ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது இவரால் திருடப்பட்டதாகக் கூறப்படும் மூன்று சைக்கிள்களைப் பொலிசார் கைப்பற்றினர்.

பிள்ளையார்கோவிலடி சட்டுவளைச் சேர்ந்த பொன்னுச்சாமி துரைச்சாமி (46 வயது) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியிலும், பிரப்பங்குளம் வீதியிலும், கோண்டாவிலிலும் வைத்துச் சந்தேக நபரால் களவாடப்பட்டதாகக் கூறப்படும் மூன்று சைக்கிள்களை கோப்பாய்ப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர், யாழ்ப்பாணப் பொலிஸ் பகுதியில் மேலும் பல சைக்கிள்களைத் திருடியுக்கலாமென கோப்பாய்ப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இவர் யாழ்ப்பாணம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகிறார்.

நவம்பர் மாதம் 29-ம் திகதி பிரப்பமகுளத்தடியிலும், கோண்டாவிலிலும் வைத்து இரண்டு சைக்கிள்களையும் இம்மாதம் 2-ம் திகதி யாழ்ப்பாணம் கோவில் வீதியில் களவாடப்பட்டதாகக் கூறப்படும் சைக்கிள்களையும் கோப்பாய்ப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த மாதம் 29-ம் திகதி சந்தேகநபர் கோண்டாவிலில் வைத்துச் சைக்கிள் ஒன்றைத் திருடிச்சென்றபோது நேரில் கண்டதாகக் கூறப்படும் ஒருவரும், அவரது நண்பர் ஒருவருமே சில நாட்களின் பின்னர் சந்தேகநபர் ஊரெழு வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது அவரை மறித்துப் பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

கோப்பாய்ப் பொலிஸ் சார்ஜன்ட் குலசிங்கம், கான்ஸ்டபிள்கள் முருகேசு, வேரகம ஆகியோர் சந்தேகநபரை விசாரணைக்குட்படுத்தி அவரால் திருடப்பட்டதாகக் கூறப்படும் 3 சைக்கிள்களையும் கைப்பற்றினர். (கொ)

## பயிற்சி

றேடியோ ரெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங். மூன்று மாத டிப்ளோமோ பயிற்சி ஆரம்பம் 9-12-1980 அனைவரும் சேரலாம்: நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7529

## நெறியாளர் குழு

வலி-கிழக்கு - தென் பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினர்களாக கூட்டணியைச் சேர்ந்த 7 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## அறிவித்தல்

கோப்பாய் தெற்கு பழம்றோட்டில் வதியும் தனபாலசிங்கம் ஸ்ரீதரனாகிய யான், எனது மனையில் வதியும் எனது சகோதரனாகிய தனபாலசிங்கம் நித்தியானந்தன் அவர்கள் எனது பெயரைச் சொல்லிச் செய்யும் கொடுக்கல் வாங்கல்களுக்கு, நான் பொறுப்பாளி யல்ல என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

7522 ஆ. த. ஸ்ரீதரன்.

மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினொன் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

## "கதவை உடைத்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம் கேட்டு விழித்தோம். நாய் குரைப்பதாக எனது மகன் கூற "பனையிலிருந்து விழுந்த பனை ஓலைகளை மாடுகள் தின்பதால் நாய் குரைக்கிறது' என்றுநான் கூறினேன். தொடர்ந்து விழித்துக்கொண்டு படுத்திருந்தபோது சுமார் பத்து நிமிடங்களின்பின்னர் திடீரென ஒருவர் வந்து 'ரோச் லைற்றை' எனது கண்ணுக்கு நேரே அடித்தார். உடனே நான் திடுக்கிட்டு எழுந்தவுடன் 'திறப்பைக் கொண்டுவா' என்று கேட்டார். நான் படுத்திருந்த தலையணையின்கீழ் இருந்த திறப்பை எடுத்து அவரிடம் கொடுத்தேன். அவர் திறப்பை என்னிடம் தந்து அலுமாரியைத் திறக்கும்படி கூறினார். அப்போது அவர் கைகளில் கத்தியும், ரோச் லைற்றும்இருந்தன.

### அறைக்குள் போகச்சொன்னார்கள்

"முதலில் ரோச்லைற்றை அடித்துக்கொண்டு வந்தவர் எனக்கு அருகில் நிற்க மேலும் இருவர் வந்தார்கள். அவர்களில் ஒருவர் எனது மகனுக்கு அருகிலும் மற்றவர் எனது மனைவிக்கு அருகிலும் நின்றார்கள். மூன்று பேரும் டோச்லைற்றும் கத்தியும் வைத்திருந்து பயமுறுத்தி என்னையும் எனது மகனையும் அறைக்குள் போகச்சொன்னார்கள். எங்களை பயமுறுத்தியவர்களில் இருவர் எங்கள் இருவருடனும் அறைக்குள் வந்தார்கள். அறைக்குள் எங்களுடன் வந்தவர்களில் ஒருவர் டோச்லைற்றை அடிக்கும்போது ஒருவர் எனது மனைவியின் 'தலைமாட்டில்' இருப்பதைக் கண்டேன். எனது மனைவின் தலைமாட்டில் நின்றவரே இவ்வழக்கின் 2-ம் எதிரியாவர். சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்.

### எதிரியை அடையாளம் காட்டினார்

"என்னுடனும் எனது மகனுடனும் அறைக்குள் இருந்தவர்களில் ஒருவர் பெட்டியை திறக்கும்படி எனக்கு கட்டளையிட்டார். நம்பர் பூட்டு என்றபடியால் திறக்க முடியவில்லை. உடனே அவர்களில் ஒருவர் பூட்டைக் கத்தியால் குத்தி கிழித்தார். பூட்டைக் கத்தியால் குத்திக் கிழித்தவர் இவ்வழக்கின் 1-ம் எதிரியான சோசுந்தரம் சுப்பிரமணியம். 4-ம் எதிரியான கிருஷ்ண பிள்ளை அப்போது அங்கிருந்தார்.

"பின்னர் 1-ம் எதிரி பெட்டியைத் திறந்து அதனுள் உள்ள சாமான்களை வெளியே போட்டார், வெளியே போட்ட பேணி ஒன்றுக்குள் எனது மனைவின் காப்பு இருந்தது. அப்பேணியை நான் எடுத்தேன் அப்போது 4-ம் எதிரி அதனைப் பறித்து அதனுள் இருந்த காப்பை எடுத்தார். மற்றும் எனது மகன் கொண்டுவந்த கைக்கடிகாரத்தையும் மணிபேர்சையும் வாசல் அருகில் இருந்து எடுத்தார்கள். அதை எடுத்துக்கொண்டு பெட்டிக்குள் [illegible] மணிக்கூட்டையும் எடுத்தார்கள். அங்கே இருந்த அரைப் போத்தல் பிரண்டியையும் எடுத்தார்கள்.

"அப்போது வெளியே இருந்து 'ஐயோ.....' என்றதொரு சத்தம் கேட்டது. அப்போது எனது மகன் முத்துலிங்கம்'அம்மா.....'என்று சத்தமிட்டார்.'குத்திப்போடுவோம்,சத்தம்போடாதே' என்று1ம்எதிரி கூறினார். அதன்பின்னர் 'ஆச்சியை அமத்திப்பிடி' என்று வெளியே எனது மனைவியுடன் இருந்த 2ம் எதிரி கூறினார். பின்னர் வாசல்படியில் இருந்த கைவிளக்கைக் கொளுத்தி வைத்துவிட்டு 'தாலிக் கொடியைஎடு' என்று என்னிடம் கேட்டார்கள், நான் தாலிக் கொடியைத் தேடினேன் அது உடனே எனக்கு அகப்படவில்லை.

"ஆகவே எங்கள் இருவரையும் அறைக்குள்வைத்துப் பூட்டிவிட்டு தாலிக்கொடியை எடுக்கும்படியும் தாங்கள் இன்னும் 2 மணித்தியாலங்களின் பின்னர் வருவதாகவும் கூறி அறைத்திறப்பையும் கொண்டு போனார்கள். பின்னர் நான் தாலிக்கொடியைத்தேடி எடுத்துவைத்துக்கொண்டு அவர்கள் திரும்பிவருவார்கள் என எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் பிறகுவரவில்லை.

"பின்னர் அறைக்குள் இருந்த சுத்தியல் ஒன்றை எடுத்து கதவை உடைத்து வெளியே வந்தோம். அப்போது எனது மனைவி வெளியே இறந்துகிடப்பதைக்கண்டேன். உடனே .

(5ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### திருமதி. அ. பாக்கியநாவதி

நீர்வேலி தெற்கு பாலவாசாவைச் சேர்ந்த காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவி பாக்கியநாவதி காலமானார். இவர் காலஞ்சென்ற பாலேஸ்வரன் பாலேஸ்வரி (U.K.), பாலசவுந்தரி (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேழி (Verly) (U.K.), சிவகுமார் (U.K.) ஆகியோரின் அன்பு மாமியும், பாலநந்தி, லிசா (U.K.), லியான் (U.K.), சிவந்தி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியை 6-12-80 சனிக்கிழமை காலை 10 மணியளவில் நீர்வேலியில் நடைபெறும்.

75 1

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிமுத்து இலங்கநாயகம்

திருமதி ஆச்சிமுத்து இலங்கநாயகம் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமலர், மிகிள்மலர் அரியரட்ணம், திரு. இராசநாயகம், திரு. ஆனந்தநாயகம், திரு. தசனயகம், திருமதி கவமலர் தம்பையா. செல்வி சந்திரமலர் ஆகியோரின் அன்புத்தாயாராவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 276, பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை (5-12-80) மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகி நல்லூர் பரி யாக்கோபு ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். 7534

## மரண அறிவித்தல்

### எஸ். கே. குமாரசுவாமி

எஸ். கே. குமாரசுவாமி (இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா தொழில்நுட்ப அதிகாரி) சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற அமிர்தவல்லியின் அன்புக்கணவரும், தவராஜதேவா (பொறியியலாளர், லக்சபான மின்சாரசபை), ஜெயராஜதேவா (சட்டத்தரணி, குலராஜதேவா (விலை மதிப்பீட்டுத் திணைக்களம்), சிவராஜதேவா, உமாகுமாரி (U K), சிவகுமார் (கோண்டாவில் மகாவித்தியாலயம்), ஜனார்த்தனன் (பொறியியலாளர், U K), கௌரிகுமாரி, (சட்டக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோன்மணிதேவி, சரோஜினிதேவி, மல்லிகாதேவி, நடராஜா (பொறியியலாளர் U K) ஆகியோரின் மாமனுருமாவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு இன்று வெள்ளிக்கிழமை 4 மணிக்கு பிறவுண்வீதி, யாழ்ப்பாண இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும்.

7533

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 5-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் [illegible] திகதி [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QN 8948/78 The Eelanaadu [illegible] Grams Eelanaadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org